**அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி, பரந்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்**

# திருப்புதல் தேர்வு - 2017 - 2018

# கணக்குப்பதிவியல்

வினாத்தாள் வடிவமைப்பில் தயாரிக்கப்பட்டவை அல்ல

நேரம் : ------ மணி 12-ஆம் வகுப்பு மொத்த மதிப்பெண் : 200

## I. கோடிட்ட இடங்களை நிரப்புக : 15 X 1 = 15

1. 31-03-2010 அன்றைய இருப்பாய்வின்படி முதலீடுகள் 10 % ₹. 50,000, முதலீடுகள் மீது பெற்ற வட்டி ₹. 4,000. முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ____________ ஆகும்.
2. 01-04-2016 அன்றைய இருப்பாய்வின்படி வங்கி கடன் ₹. 10,00,000 வங்கி வட்டி வீதம் ஆண்டுக்கு 12% . வட்டி செலுத்தியது ₹. 50,000. 31-03-2017 அன்று நிலுவையில் உள்ள வட்டி ₹.____________ .
3. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்த சொத்துகள் ₹. 47,500. அவருடைய பொறுப்புகள் ₹. 17,700. அவருடைய முதல் ______________ ஆகும்.
4. மொத்த விற்பனை விலை ₹. 4,70,000. ரொக்க விற்பனை ₹. 2, 65,000. எனில் கடன் விற்பனை ₹. ______________.
5. ஒரு இயந்திரதின் விற்பனை விலை ₹.7,00,000, விற்பனையில் ஏற்பட்ட நட்டம் ₹.1,00,000 எனில் அந்த இயந்திரதின் ஏட்டு மதிப்பு ₹.____________ .
6. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ₹. 2,400, ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ₹. 300 எனில், முதலினக் காப்பு ₹. ______ ஆகும்.
7. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 50,000 , கூடுதலாக 10,000 விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால், அதனை _______ஒப்பம் என்று அழைக்கப்படும்.
8. தேய்மானத் தொகை ₹. 27,000 . சொத்தின் அடக்கவிலை ₹. 3,00,000 எனில், தேய்மானம் விகிதம் ------------ .
9. இருப்பாய்வின்படி இயந்திரத்தின் மதிப்பு ₹. 1,00,000 . ஆண்டிறுதியில் 10 % வீதம் நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. எனில், இரண்டாண்டு முடிவில் இயந்திரத்தின் மதிப்பு ₹. ---------------
10. ஆண்டு தொடக்கத்தில் சரக்கிருப்பின் மதிப்பு ₹. 38,000 . ஆண்டு இறுதியில் சரக்கிருப்பின் மதிப்பு ₹. 12,000 . எனில், சராசரி சரக்கிருப்பின் மதிப்பு ₹. ---------------
11. ஜனவரி மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு ₹. 15,000 எனில், பிப்ரவரி மாதத்தின் தொடக்க இருப்பு ₹. ---------------
12. சராசரி இலாபம் ₹. 13,000 . கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை 3 எனில், நற்பெயர் மதிப்பு ₹. ---------------
13. ஒரு கூட்டாண்மையில், பழைய இலாபப் பகிர்வு விகிதம் ₹. 18,000 . புதிய இலாபப் பகிர்வு விகிதம் ₹. 9,500 எனில், தியாக விகிதம் ₹. ---------------
14. ₹.100 முக மதிப்புள்ள ஒரு பங்கு ₹.120-க்கு வெளியீடு செய்யப்பட்டால் அப்பங்கின் மீதான பத்திர முனைமம் ₹___________ ஆகும்.
15. ஒரு நிறுமம் ஒன்று ₹. 10 மதிப்புடைய 1,00,000 பங்குகளை பொது மக்களுக்கு வெளியிட்டது.அவற்றில் 60,000 பங்குகளை மட்டுமே பொது மக்கள் வாங்க ஒப்புக்கொண்டால், அந்நிறுவனத்தின் ஒப்பிய முதல் ₹. ___________.



## II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 15 X 1 = 15

16. 31-03-2002 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹.1,50,000 கடனாளிகள் மீது 5% வாரா ஐயக் ஒதுக்கு ஒதுக்கப்படவேண்டிய தொகை _________.
    (அ) ₹. 15,000 (ஆ) ₹. 7,500 (இ) ₹. 75,000
17. ₹. 10,000 மதிப்புள்ள ஒரு நிலைச் சொத்தின் மீது ஆண்டுக்கு 10% குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம் :
    (அ ) ₹. 2,107 ( ஆ ) ₹. 2,710 ( இ ) ₹. 2,701
18. A ,B ,C ஆகியோரின் இலாபப் பங்கு முறையே $\frac{2}{5}$ : $\frac{2}{5}$ : $\frac{1}{5}$ ஆகும். C கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார். A , B ஆகியோரின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?
    (அ) 2 : 2 (ஆ) 2 : 1 (இ) 1 : 2
19. P,Q,R ஆகியோரின் இலாபப் பங்கு முறையே 1/2 : 1/3: 1/6 ஆகும். Q கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார். P, R ஆகியோரின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது ?
    (அ) 2 : 2 (ஆ) 2 : 1 (இ) 3 : 1
20. 01.04.2016 அன்று பற்பல கடனாளிகள் ₹. 49,600. 31.03.02017 அன்று பற்பல கடனாளிகள் ₹. 59,900. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 69,500 எனில்,அவ்வாண்டில் கடன் விற்பனை ---------
    (அ) ₹.20,000 (ஆ) ₹.59,200 (இ) ₹. 79,800
21. ஒரு நிறுவனத்தின் நடப்புச் சொத்துகள் ₹. 90,000 மற்றும் நடப்பு பொறுப்புகள் ₹. 30,000 எனில், நடப்பு விகிதம் ----------- ஆகும்.
    (அ) 1 : 1 (ஆ) 2 : 1 (இ) 3 : 1
22. ஜனவரியில் தொடக்க இருப்பு ₹.1,000 எதிர்பார்க்கும் பெறுதல்கள் ₹. 250 மற்றும் செலுத்தல்கள் ₹. 125 எனில், பிப்ரவரி மாதத்தின் தொடக்க இருப்பு ₹. -----------
    (அ) ₹. 1,150 (ஆ) ₹.1,375 ( இ) ₹. 1,125
23. X , Y என்ற கூட்டாளிகள் 3: 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். Y விலகும் பட்சத்தில், நற்பெயரின் மதிப்பை ₹. 30,000 ஆக தோற்றுவிக்கும் பொழுது X, Y ஆகியோரின் முதல் கணக்கிற்கு மாற்றப்படும் தொகை ₹. ----------
    (அ) ₹. 18,000 , ₹.12,000 (ஆ) ₹.20,000 , ₹. 10,000 (இ) ₹. 15,000 , ₹.15,000
24. இருப்பாய்வின்படி கடனீந்தோர் ₹. 30,000 . சரிக்கட்டுதலின்படி கடனீந்தோர் மீது வட்ட ஒதுக்கு 2 % உருவாக்க வேண்டும் எனில், இருப்புநிலைக்குறிப்பில் காட்டப்பட வேண்டிய கடனீந்தோர் தொகை ₹. ----------
    (அ) ₹.29,400 (ஆ) ₹.30,600 (இ) ₹. 29,600
25. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ₹. 10 மதிப்புடைய 500 பங்குகளை, இறுதி அழைப்பு பணம் ( பங்கொன்றுக்கு ) ₹. 2 பெறப்படாமைக்காக ஒறுப்பிழப்பு செய்தனர்.பின்னர் இப்பங்குகள் பங்கொன்றுக்கு ₹. 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. எனில் முதலினக் காப்பிற்கு மாற்றப்படும் தொகை ₹. -------- ஆகும்.
    (அ) ₹.1,000 (ஆ) ₹.4,000 (இ) ₹. 3,000
26. ₹. 10, 00,000 க்கு வாங்கப்பட்ட ஒரு நிலத்தின் சந்தை மதிப்பு ₹. 13,00,000. எனில், இறுதி கணக்குகள் தயாரிக்கும் நாளில், ஏடுகளில் அந்நிலத்தின் மதிப்பு ₹.---------- தொகையாகக் காட்டப்படும்.
    (அ) ₹.10,00,000 (ஆ) ₹.13,00,000 (இ) ₹. 23,00,000
27. சராசரி இலாபம் ₹. 50,000 , சாதரண இலாபம் ₹. 14,000 எனில், உயர் இலாபம் ₹. --------
    (அ) ₹.14,000 (ஆ) ₹.26,000 (இ) ₹. 64,000

28. தொடக்கச் சரக்கிருப்பு ₹. 10,000 , கொள்முதல் ₹. 2,00,000 மற்றும் இறுதிச் சரக்கிருப்பு ₹. 5,000 விற்ற பொருளின் அடக்கவிலை ₹. ------------- ஆகும்.

(அ) ₹ . 2,15,000 (ஆ) ₹. 2,10,000 (இ) ₹. 2,05,000

29. இயக்க இலாப விகிதம் 55 % எனில், இயக்கவிகிதம் ----------- ஆகும்.

(அ) 55 % (ஆ) 45 % (இ) 35 %

30. பயன்படுத்தப்பட்ட முதல் ₹. 3,00,000 , இலாப விகிதம் 10 % எனில், சாதாரண இலாபம் விகிதம் ₹. --------

(அ) ₹.3,000 (ஆ) ₹.30,000 (இ) ₹. 3,30,000

## III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும் : 10 X 5 = 50

31. எடுப்புகள் மீதான வட்டி ₹. 12,000—க்கான சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப்பதிவு காண்க

32. 31.03.2016 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ₹. 20,000. முதல் மீது வட்டி 6 % அனுமதிக்கப்பட்டது.சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.

33. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.

தொடக்க முதல் ₹. 24,000; எடுப்பு ₹. 25,200; இறுதிமுதல் ₹. 13,000;
கூடுதல் முதல் ₹.42,000

34. தொடக்க பற்பல கடனாளிகள் ₹. 87,125 , இறுதி பற்பல கடனாளிகள் ₹.76,500 , கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹.2,46,000 எனில், கடன் விற்பனை யாது?

35. ஒரு நிறுமம் ₹.5,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 50,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.

36. பின்வரும் விவரங்களைக் கொண்டு புற அகப் பொறுப்புகள் விகிதத்தைக் கணக்கிடுக.

சாதாரண பங்கு முதல் ₹. 2,00,000 ; வங்கி கடன் ₹. 1,50,000; பொதுக்காப்பு ₹. 50,000 கடன் பத்திரம் ₹. 4,50,000.

37. பின்வரும் விவரங்களைக் கொண்டு முதல் விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக.

சாதாரணப் பங்கு முதல் ₹. 1,00,000 ; விற்பனை ₹. 3,75,00 ; விற்பனைத் திருப்பம் ₹. 25,000 நீண்டகால கடன் ₹. 50,000 ; காப்புகள் ₹. 25,000

38. பின்வரும் விவரங்களிலிருந்து ஜனவரி 2015 க்கான ரொக்கத் திட்டப் பட்டியலைத் தயாரிக்க.

தொடக்க ரொக்க இருப்பு ₹. 25,000 ; ஜனவரியில் ரொக்க விற்பனை ₹. 70,000
ஜனவரியில் ரொக்கக் கொள்முதல் ₹. 53,000 ; ஜனவரியில் செலுத்த வேண்டிய வட்டி₹.1,000

39. நற்பெயரின் மதிப்பு கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடுக.

முதலாம் ஆண்டு ( நட்டம் ) ₹. 10,000 ; இரண்டாம் ஆண்டு இலாபம் ₹. 26,000;
மூன்றாமாண்டு இலாபம் ₹. 34,000 ; நான்காமாண்டு இலாபம் ₹. 78 ,000

40. சதீஷ், கிஷோர் என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர்.அவர்கள் கண்ணன் என்பவரை 1/5 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர்.அவர்களது புதிய இலாப பகிர்வு விகிதத்தை காண்க.

41. அனிதா,வனிதா எனும் இரு கூட்டளிகள் சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அனிதா ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இறுதியிலும் ₹. 2,000 திரும்ப எடுத்துக் கொள்கிறார்.அனிதாவிற்கு ஆண்டுக்கு 10% எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

42. கமல் வரையறு நிறுமம் ₹.10 மதிப்புடைய 2,00,000 பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.



43. ஒரு நிறுமம் ஒன்று ₹.10 மதிப்புடைய பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகை பங்கொன்றுக்கு ₹. 3 வீதம் செலுத்தப் படாததால் ஒறுப்பிழப்பு செய்தது. இப்பங்குகள் ₹. 30,000 க்கு முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

44. A, B, C என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். C விலகும்பொழுது, அவருடைய பங்கை B முழுவதுமாக எடுத்துக்கொள்கிறார். தொடரும் கூட்டாளிகளின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுக.

## IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 45 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும் : 5 X 12 = 60

45. (அ) 31 – 03 – 2011 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹. 1,22,000.

சரிக்கட்டுதல்கள் :

i) ₹. 2,000 வாராக் கடன் போக்கு எழுதுக.
ii) பற்பல கடனாளிகள் மீது 5 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
iii) கடனாளிகள் மீது 2 % தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக. ( அல்லது )

(ஆ) திரு.மணி அவர்களது 31 – 03 – 2006 அன்றைய இருப்பாய்வு கீழ்கண்ட விவரங்களைத் தருகிறது. பற்பல கடனாளிகள் ₹. 40,000.
வாராக்கடன் ₹. 700.
வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹. 1,200.

சரிக்கட்டுதல்கள் :

i) ₹. 1,000 வாராக் கடன் போக்கு எழுதுக.
ii) பற்பல கடனாளிகள் மீது 5 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

46. திரு. ராஜ் அவர்கள் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். 31.03.2012 அன்றும் 31.03.2013 அன்றும் அவரது சொத்துக்களும், பொறுப்புகளும் கீழ்கண்டவாறு இருந்தன.

| விவரம் | 31.03.2012 ₹ | 31.03.2013 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 35,000 | 50,000 |
| ரொக்க இருப்பு | 5,000 | 60,000 |
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 30,000 |
| பற்பல கடனாளிகள் | 75,000 | 1,00,000 |
| அறைகலன் | 15,000 | 15,000 |

அவர் அந்த ஆண்டில் ₹. 15,000 கூடுதல் முதல் இட்டார்.சொந்த செலவுகளுக்காக ₹. 35,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2012 – 2013 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிக.

47. பின்வரும் விவரங்களிலிருந்து ஜூன், ஜூலை மாதங்களுக்கான ரொக்கத்திட்டப்பட்டியல் தயார் செய்க.

i) ஜூன் மாதத்தில் தொடக்க இருப்பு ₹. 7,000
ii) ரொக்க விற்பனை முறையே ஜூன் ₹. 20,000 , ஜூலை ₹. 30,000
iii) ஒவ்வொரு மாதத்திலும் செலுத்த வேண்டிய கூலி ₹. 6,000
iv) ஜூலையில் அறைகலன் வாங்கியது ₹. 5,000
v) ரொக்க கொள்முதல் முறையே ஜூன் ₹. 10,000 , ஜூலை ₹. 9,000

48. A , B , C என்ற கூட்டாளிகளின் பழைய இலாபப் பகிர்வு விகிதம் 4 : 3 : 2 . பின்வரும் சூழ்நிலைகளில் புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக

அ) A விலகினால் ஆ) B விலகினால் இ) C விலகினால்

49. சன் வறையறு நிறுமம் 01 – 04 -2012 அன்று ₹. 40,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு அவ்வியந்திரம் ₹. 37,00,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10 % நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டு தோறும் கணக்குகள் மார்ச் 31 ல் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்குகளை முதல் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50 . 31 – 03 -2016 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து (அ) நடப்பு விகிதம், (ஆ) நீர்மை விகிதம் ( இ ) கடனாளிகள் விற்பனை விகிதங்கள் ஆகியவற்றைக் காண்க.

இருப்புநிலைக் குறிப்பு 31 – 03 -2016

| பொறுப்பு | ₹. | சொத்து | ₹. |
|---|---|---|---|
| முதல் | 1,30,000 | இயந்திரங்கள் | 90,000 |
| இலாப நட்டக் கணக்கு | 8000 | சரக்கிருப்பு | 44,000 |
| கடனீந்தோர் | 48,000 | பற்பல கடனாளிகள் | 38,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | | முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 4,000 |
| | 1,86,000 | | 1,86,000 |

51. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நடப்புக் கணக்குகளையும் தயார் செய்க.

| | ரவி ₹. | ராஜா ₹. |
|---|---|---|
| 1-04-2003 அன்றைய முதல் | 1,00,000 | 60,000 |
| 1-04-2003 அன்றைய நடப்புக் கணக்கு | 3,000 ( ப ) | 2,000 ( வ ) |
| 2003 - 2004 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 8,000 | 5,000 |
| முதல் மீது வட்டி | 5,000 | 3,000 |
| எடுப்பு மீது வட்டி | 240 | 150 |
| 2003-2004 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு | 12,000 | 10,000 |
| கழிவு பெற்றது | 1,200 | 1,000 |
| கூட்டாளியின் ஊதியம் | 4,000 | ——— |

52. அருண் வரையறு நிறுமம் முற்றும் அழைக்கப் பெற்ற ₹.10 மதிப்புடைய 1,000 நேர்மைப் பங்குகளை இறுதி அழைப்பு பங்கு ஒன்றிற்கு ₹.2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது.அவற்றுள் 700 பங்குகள் ₹. 8 வீதம் முற்றும் செலுத்திய பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பிட்டப் பதிவுகளும் , பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்குகளைத் தயார் செய்க.



V . <u>எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றில் 53 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்:</u> 3 X 20 = 60

53. (அ) R, S, T என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2;1 எனும் விகிதத்தில் இலாபம் நட்டம் பகிர்ந்து வந்தனர். 31-03-2004 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 11,000 | வங்கி | 32,000 |
| காப்பு நிதி | 24,000 | பற்பல கடனாளிகள் | 10,000 |
| | | சரக்கிருப்பு | 9,000 |
| முதல் கணக்குகள் | | இயந்திரம் | 24,000 |
| R 45,000 | | நிலமும் கட்டடமும் | 38,000 |
| S 30,000 | | இலாப நட்ட க/கு | 12,000 |
| T 15,000 | 90,000 | | |
| | 1,25,000 | | 1,25,000 |

பின்வரும் இனங்களைக் கருத்தில் கொண்டு 01.01.2005 அன்று ‘ T ‘ நிறுவனத்திலிருந்து விலகினார்.

i) நிறுவனத்தின் நற்பெயர் ₹. 18,000 என மதிப்பிடப்பட்டது.
ii) ஐயக்கடன் ஒதுக்கு ₹. 500 க்கு வகை செய்க.
iii) நிலம், கட்டடம் 20 % மதிப்பேற்றம் செய்யப்பட்டது.
iv) இயந்திரத்தின் மீது 5% தேய்மானம் நீக்கப்பட்டது.
v) கொடுபடா பழுதுபார்ப்பு செலவுக்கு ₹. 1,100 ஒதுக்கீடு செய்யப்பட்டது.
vi) ‘ T ‘ என்பவருக்கு ₹. 5,000 செலுத்தப்பட்டது. மீதி அவரின் கடன் கணக்கிற்க்கு மாற்றப்பட்டது. மறுமதிப்பீட்டு க/கு முதல் கணக்குகள் மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

(அல்லது )

(ஆ) திருமதி. மாலதி தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் வைத்திருக்கிறார். 01- 04-2013 அன்று அவரது முதல் ₹. 5,00,000.

கூடுதல் தகவல்கள் :

| | ₹. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 2,50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 50,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர்க்கு அளித்த ரொக்கம் | 60,000 |
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 40,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 1,83,000 |
| வியாபாரச் செலவுகள் | 1,20,800 |
| வளாகம் ( 31-03-2011 ) | 4,00,000 |
| அறைகலன் ( 31-03-2011 ) | 7,200 |
| இறுதி சரக்கிருப்பு | 2,60,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 80,000 |
| பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 2,00,000 |
| இறுதி ரொக்க இருப்பு | 55,000 |

மார்ச் 31, 2014 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலை குறிப்பையும் தயார் செய்க.

54. திரு. சந்தானம் அவர்களின் இருப்பாய்விலிருந்து 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான இறுதிக்கணக்குகள் தயார் செய்க.

| பற்று இருப்புகள் | ₹. | வரவு இருப்புகள் | ₹. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,20,000 | முதல் | 80,000 |
| கை ரொக்கம் | 1,500 | பற்பலக் கடனீந்தோர் | 25,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 40,000 | வங்கிக் கடன் | 20,000 |
| பற்பல கடனாளிகள் | 60,000 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 25,000 |
| பொறியும்,பொறித்தொகுதியும் | 50,000 | விற்பனை | 2,00,000 |
| அறைகலன் | 20,000 | கழிவு பெற்றது | 2,500 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 15,000 | | |
| வாடகையும், வரியும் | 10,000 | | |
| கூலி | 16,000 | | |
| சம்பளம் | 20,000 | | |
| | 3,52,000 | | 3,52,000 |

சரிக்கட்டுதல்கள் :

i) இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ₹. 50,000

ii) கொடுபட வேண்டிய கூலி ₹. 4,000.

iii) முதல் மீது வட்டி 6 % அனுமதிக்க.

iv) பொறியும்,பொறித்தொகுதியும் மீது 10 % தேய்மானம் நீக்குக.

v) பெறப்பட வேண்டிய கழிவு ₹. 500.

55. பின்வரும் விவரங்களைக் கொண்டு i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் iii) சரக்கிருப்பு விற்பனை விகிதம் iv) நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

| | ₹. |
|---|---|
| விற்பனை | 1,50,000 |
| விற்ற பொருளின் அடக்க விலை | 1,20,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 29,000 |
| இறுதி சரக்கிருப்பு | 31,000 |
| நிலைச் சொத்துக்கள் | 75,000 |
| நிர்வாகச் செலவினங்கள் | 15,000 |

**56**. கீழ்காணும் விவரங்களிலிருந்து ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான ரொக்க திட்டப் பட்டியல் தயாரிக்க.

| மாதம் | கடன் விற்பனை ₹. | கடன் கொள்முதல் ₹. | அலுவலகச் செலவுகள் ₹. |
|---|---|---|---|
| பிப்ரவரி | 75,000 | 20,000 | 7,000 |
| மார்ச் | 85,000 | 35,000 | 10,000 |
| ஏப்ரல் | 1,00,000 | 17,000 | 12,000 |
| மே | 1,20,000 | 24,000 | 9,000 |
| ஜூன் | 1,05,000 | 22,000 | 10,000 |

i) தொடக்க ரொக்க இருப்பு ₹.50,000.

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்

iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்

iv) அலுவலக செலவுகள் அந்தந்த மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

v) ஏப்ரல் மாதத்தில் பெறவேண்டிய பங்காதாயம் ₹. 1,000.

57. சிவா வரையறு நிறுமம் ₹. 100 முகமதிப்புடைய 30,000 பங்குகளை ₹. 20 முனைமத்தில் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வின்னப்பத்தின்போது | ₹. 25 |
| ஒதுக்கீட்டின் போது ( முனைமம் உள்பட ) | ₹. 45 |
| முதலாவது அழைப்பின் போது | ₹. 25 |
| இறுதி அழைப்பின் போது | ₹. 25 |

பங்குகள் அனைத்தும் விண்ணப்பிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இரண்டு அழைப்புகளும் விடுக்கப்பட்டு உரிய நேரத்தில் தொகைகளும் பெறப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து பங்குமுதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு, வங்கிக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.



B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613